**சுங்க திணைக்களத்தின் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் நிதியம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க திணைக்களத்தின் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்ற்குரியதாக சுங்க உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கூட்டு பெறுமதி ரூபா 2,995,200 ஆன தகவல் தொழிநுட்ப தொடர்பாடல் கட்டணம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,993,600 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் அது ரூபா 998,400 இனால் மிகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற அட்டுறு தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் கட்டண பெறுமதியில் 2024 ஆம் ஆண்டின் ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய அட்டுறு பெறுமதி மட்டும் 2025 பெப்ரவரி மாதம் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய அட்டுறு தொகைக்குரிய கோப்புகள் இது வரையில் நிதி பிரிவிற்கு பெறப்பட்டிராததுடன் குறித்த கோப்புகள் பூரணமாக்கப்பட்டவுடன் கொடுப்பனவு செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களினுள் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சரியாக உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்குரிய திரண்ட நிதிக்கு செலுத்தப்பட வேண்டிய கூட்டு பெறுமதி ரூபா 748,800 ஆன தகவல் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் கட்டணம் நிதிக் கூற்றினுள் ரூபா 998,400 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 249,600 இனால் மிகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற அட்டுறு தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் கட்டண பெறுமதியில் 2024 ஆம் ஆண்டின் ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய அட்டுறு பெறுமதி மட்டும் 2025 பெப்ரவரி மாதம் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய அட்டுறு தொகைக்குரிய கோப்புகள் இது வரையில் நிதி பிரிவிற்கு பெறப்பட்டிராததுடன் குறித்த கோப்புகள் பூரணமாக்கப்பட்டவுடன் கொடுப்பனவு செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களினுள் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சரியாக உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் கடன்பட்டோர் பேரேட்டில் 02 விமான கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய கூட்டு பெறுமதி ரூபா 240,000 நிதி | கைதவரலாக Jazeera Airways இடமிருந்து பெற வேண்டிய ரூபா 105,000 ஆன தொகை இறுதி | நிதிக் கூற்றினுள் நடைமுறை சொத்துக்கள் மற்றும் பெற வேண்டிய மீதிகள் சரியாக |

| | | |
|---|---|---|
| நிலைமைக் கூற்றில் இறுதி கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்படாமையினால் கடன்பட்டோர் மீதி குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் மீதியில் காண்பிப்பதற்கு முடியாது போயிருந்தது.<br>மத்தளை விமான நிலையத்தினால் 2024 பெப்ரவரி மாதத்திற்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 135,000.00 ஆன தொகை 2024.07.16 ஆந் திகதி செலுத்தி முடிவடைந்துள்ளமையினால் 2024.12.31 இல் இறுதி கடன்பட்டோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா 988,217,366 உம், கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணமாக ரூபா 153,551,288 உம், தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் கட்டணமாக ரூபா 11,980,800 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 1,153,749,454 ஆன தொகை உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அக் கட்டணங்கள் உறுதி செய்வதற்கான சான்றாக சேவைக்கு சமூகமளித்தமை உறுதி செய்யும் கைவிரல் அடையாள அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்ககப்படவில்லை. | சாதாரணமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின கடமைகளுக்காக கொடுப்பனவு செய்யப்படுவது தாபன விதிக் கோவையின் VIII அதிகாரத்தின் பிரகாரமாகும். எனினும் இலங்கை சுங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த கட்டணம் செலுத்தப்படுவது தாபன விதிக் கோவையின் IX அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள "கட்டணங்கள்" பிரகாரமாகும். அவ் அதிகாரத்தின் 1:1:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் "சுங்க திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்க்திற்கு மேற்கொள்கின்ற சேவைக்காக கட்டணமொன்று பெற்றுக் கொள்ள இயலுமை காணப்படுகின்றது" அந்த சுங்க சேவைக் கட்டணம் மேலதிக நேரக் கொடுப்பனவு வகைப்படுத்தலுக்கு உட்படாது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் பரிந்துரைகள் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஒக்தோபர் 26 திகதிய 1520/17 திகதிய இலங்கை சனநாயக சோசலிய குடியரசின் அதி விசேட வரத்தமானி பத்திரிக்கை | சுங்க மேலதிக நேரக் வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் கணக்கிலிருந்து சுங்க உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுங்க மேலதிக நேரக் வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் கணக்கிலிருந்து சுங்க உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரின் MF1/4/CUS/474 மற்றும் 2010.11.09 திகதிய கடிதத்தின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிய குடியரசின் வரத்தமானி பத்திரிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2013 மார்ச் 01 ஆந் திகதிய 855 ஆம் இலக்க திணைக்கள கட்டளை மற்றும் 2018 ஒக்டோபர் 01 ஆந் திகதிய இலக்கம் 1274 என்ற திணைக்கள கட்டளை மற்றும் 2024 செப்தெம்பர் 25 திகதிய 1664 ஆம் இலக்க திணைக்கள கட்டளை | 2004 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வீதம் திணைக்கள கட்டளை இலக்கம் 855 ஊடாக 45 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும், 1274 கட்டளை ஊடாக 2018 ஆம் ஆண்டில் 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் 1664 ஆம் கட்டளை இலக்கத்தின் ஊடாக 2024 ஆம் ஆண்டில் மீண்டும் 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் மேலதிக நேரக் வேலை குழுவின் இறுதி பரிந்துரையின் அடிப்படையில் சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும். இந்த கட்டளைகள் வெளியிடப்படுவதற்கு மேலதின நேரக் வேலை குழுவின் அல்லது நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டமை கணக்காய்வினால் உறுதி செய்யப்படவில்லை. | மேலதிக நேரக் வேலை குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் செயலாளரின் 1/ரேகு/47/3 மற்றும் 2004/02/09 திகதிய கடிதத்தின் ஊடாக நிகழ்கால சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவு கணிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2013, 2018 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் வேலை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அவ் அளவுகள் திருத்தப்பட்டுள்ளது. | மேலதிக நேரக் வேலை குழுவின் பரிந்துரையுடன் நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 167,004,158 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 123,832,042 ஆகும். கடந்த ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டில் பற்றாக்குறை ரூபா 43,172,116 தொகையினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு மேலதிக நேர செலுத்துதல், கடந்த ஆண்டிற்கு இணையாக ரூபா 126,155,793 இனால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த 5 ஆண்டுகள் காலப்பகுதியினுள் சுங்க மேலதிக வேலை நிதியத்திற்கு பெறப்பட்ட வருமானத்தினை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 790,606,873 தொகையான செலவீனம் ஏற்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் 2020 ஆம் ஆண்டில் ரூபா 2,133,975,331 ஆக நிலவிய திரண்ட நிதியின் மீதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் ரூபா 1,469,975,205 வரையில் ரூபா 664,000,126 இனால் குறைந்திருந்தது. சேகரிக்கப்பட்ட வருமானத்தினை பாரக்கிலும் கொடுப்பனவு செய்தமை இதற்கு காரணமாகியிருந்த போதிலும் நிதியத்தின் திரண்ட மீதி குறைவடைகின்றமை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | 2007.10.26 திகதிய மற்றும் 1520/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரிக்கையின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற மேலதிக நேரக் கொடுப்பனவு கணிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டணங்கள் திருத்தப்படவில்லை. ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் விகிதம் அதிகரித்தல் மற்றும் ஊழியர் எண்ணிக்கை அதிகரித்தமையினாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | வருமானத்திற்கு பொருந்தும் வகையில் மேலதிக நேரக் கொடுப்பனவு கட்டமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உத்தியோகத்தர்கள் சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக சேவையில் ஈடுப்பட்டமை தொடர்பில் சரியாக உறுதி செய்யப்படாது சுங்க மேலதிக வேலை வருமானத்தில் அண்ணவளாக 90 சதவீத்திதம் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுங்க மேலதிக வேலை நிதியிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது சுங்கம் 221 என்ற மாதிரியின் பிரகாரம் உரிய முறையில் மேற்பார்வை செய்யப்படுகின்றதுடன் அப் பெறுமதி பரிந்துரை செய்யப்பட்டு தொடர்புடைய பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்தின் கீழ் சரியாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சாதாரண கடமை நேரத்தின் பின்னர் கடமை நிறைவேற்றப்பட்டமை உறுதி செய்யப்பட்ட பின்னர் மேலதிக நேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2017 பெப்ரவரி 27 திகதி திணைக்கள கட்டளை இலக்கம் 1140 பிரகாரம் சுங்க கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணம் பெறப்படுவதற்கு தகைமை பெறுவதற்கு வார நாட்களில் மு.ப 06.00 இற்கு முன்னர் மற்றும் வார இறுதியில் மற்றும் விடுமுறை தினங்களில் மு.ப 09.00 இற்கு முன்னர் கடமைக்கு சமூகமளிக்கப்பட வேண்டிய போதிலும், பின்பற்றப்பட்ட வேண்டிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக பதவியணயின் வருகை மற்றும் வெளியேறல் உறுதி செய்யப்படாது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையில் ரூபா 3,488,310,572 ஆன தொகை கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | சாதாரணமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின கடமைகளுக்காக கொடுப்பனவு செய்யப்படுவது தாபன விதிக் கோவையின் VIII அதிகாரத்தின் பிரகாரமாகும். எனினும் இலங்கை சுங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த கட்டணம் செலுத்தப்படுவது தாபன விதிக் கோவையின் IX அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ‘‘கட்டணங்கள்’’ பிரகாரமாகும். அவ் அதிகாரத்தின் 1:1:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ‘‘சுங்க திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு மேற்கொள்கின்ற சேவைக்காக கட்டணமொன்று பெற்றுக் கொள்ள இயலுமை காணப்படுகின்றது’’ | பின்பற்றப்பட வேண்டிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியணி வருகை மற்றும் வெளியேறல் உறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் கடன்ப்டோரிடமிருந்து ரூபா 71,111,110 ஆன மீதி அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அம் மீதி இரண்டு ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்படாது கூட்டுத்தொகை ரூபா 4,631,314 ஆன கடன் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. மேற்படி நிலுவை தொகையினுள் 14 நிறுவனங்களுக்குரிய கூட்டு பெறுமதி ரூபா 718,388 ஆன கடன் மீதி 6 ஆண்டுகளுள் மாற்றமடையாது காணப்படுகின்ற போதிலும் நீண்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற இந்தகடன் மீதி அறவிடப்படுவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவை கடன்பட்டோர் மீதி கொடுப்பனவு செய்யும் வரையில் மீண்டும் பதிவு எண்கள் நிறுத்தப்படுவதற்கு மற்றும் நிலுவை தொகை கொடுப்பனவு செய்யும் வரையில் மீண்டும் வருடாந்த பிணைமுறி நாளதுவரையாக்கப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2024.12.31 இல் நிலவிய கடன்பட்டோர் மீதி 2025.04.30 இல் ரூபா 22,486,271 வரையில் குறைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. எஞ்சிய கடன்பட்டோர் மீதி அறவிடப்படல் தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை கடன்பட்டோர் மீதி விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா 911,808,364 உம், கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணமாக ரூபா 307,102,576 உம் மற்றும் தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 14,976,000 | 2007.10.26 திகதிய மற்றும் 1520/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரிக்கையின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற மேலதிக நேரக் கொடுப்பனவு | மேலதிக நேரக் கொடுப்பனவு நிதியத்தின் வருமானம் மற்றும் நிதியத்தில் |

உம் ஆக வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பணிகளுடன் தொடர்புற்ற உத்தியோகத்தர்ளுக்கு மேலதிக நேர வேலை வருமானத்தில் 108.38 சதவீதமான ரூபா 988,217,366 உம், கப்பல் சரக்கு பரிசோதனை வருமானத்தில் 50 சதவீதமான ரூபா 153,551,288 உம், தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் வருமானத்தில் 80 சதவீதமான ரூபா 11,980,800 உம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி கொடுப்பனவு முறைமை உரிய கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படவில்லை என கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. நடப்பு ஆண்டினுள்ளும் சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தினை மிகைத்து ரூபா 76,409,002 ஆன தொகை மேலதிக நேரக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

கணிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டணங்கள் திருத்தப்படவில்லை. ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் விகிதம் அதிகரித்தல் மற்றும் ஊழியர் எண்ணிக்கை அதிகரித்தமையினாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அறவிடப்படுகின்ற கட்டணங்கள் நிகழ்காலத்திற்கு கொருந்தும் வகையில் திருத்தப்படுவதற்காக தற்போது வர்த்தமானி பத்திரிக்கையொன்று வரைவு செய்யப்பட்டு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கான அங்கீகாரம் இதுவரையில் பெறப்படவில்லை.

மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு தொடர்பில் வெளிப்படைத் தன்மை மற்றும் சட்டப்பூர்வத் தனைமை உறுதி செய்யும் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.